LIBRARY
16 AUG 2012
Eastern University, Sri Lanka.

# PROFESSOR S. PATHMANATHAN RESEARCH CONTRIBUTIONS IN HISTORY

BY,
**MISS. KISHANTHINI SELVARETNAM**
Reg. No. EU/IS/2006/AC/55
Index No: CS 2750

FAC199
Project Report
Library - EUSL

A DISSERTATION SUBMITTED TO THE FACULTY OF ARTS AND CULTURE, EASTERN UNIVERSITY, SRILANKA. AS A PARTIAL FULFILLMENT OF THE REQUIREMENT OF THE BACHELOR OF ARTS DEGREE.

199

DEPARTMENT OF HISTORY
ARTS AND CULTURE
EASTERN UNIVERSITY
SRILANKA
2011

PROCESSED
Main Library, EUSl

# முகவுரை

இலங்கையின் முதன்மையான தகைசார் பேராசிரியர்களுள் ஒருவரான எங்கள் ஆசான் சிவசுப்பிரமணியம் பத்மநாதன் பல் துறை விற்பன்னராக, சர்வதேச புகழ் பெற்ற ஈழத்து வரலாற்றாளராக விளங்குகின்றார். பன்மொழித் தேர்ச்சியும், மிகுந்த நினைவாற்றலும் மிக்க இவரது ஆளுமையும், ஆற்றலும், தனித்திறனும் அவர் தம் ஆய்வு முயற்சிகளின் மூலமும், சேவைகளின் மூலமும் அறிந்து கொள்ளலாம்.

இவர் ஆரம்பக் கல்வியிலும், உயர் கல்வியிலும் திறமை மிகுந்தவராக விளங்கி, 1963 ஆம் ஆண்டு தொடக்கம் தேசிய, சர்வதேச ரீதியாகப் பல்வேறு பல்கலைக் கழகங்களில் தனது விரிவுரையாளர்ப் பணியினைச் சிறப்பான வகையில் மேற் கொண்டு, பல்வேறு ஆய்வுகளைத் திறன்படச் செய்து விருதுகளையும், பட்டங்களையும் பெற்றதோடு தேசிய, சர்வதேச ரீதியாக இடம்பெற்ற பல மாநாடுகளிலும் பங்குபற்றி, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உபதலைவர் என்ற உயர்பதவி நிலையினையடைந்து, இன்று தகைசார் பேராசிரியராக விளங்குகின்றார்.

இக்கால கட்டத்தினுள் பல சவால்களைத்தாண்டி தமது பணியினைச் சிறப்பாக மேற்கொண்ட இவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் சேவைபுரிந்த ஐந்தாண்டு காலத்தில் தனக்கு வழங்கிய பொறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு சில தீர்க்கமான முடிவுகள் ஏற்படுவதற்கு வழி செய்திருந்தார்.

அந்தவகையில், ஜனாதிபதி பிரேமதாசாவினால் உருவாக்கப்பட்ட இணைப்புக்கல்லூரிமுறை அவரின் பின் சீர்குலைந்தமையால் ஏற்பட்ட பிரச்சினையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க 1995இல் கல்வியமைச்சராகவிருந்த ரிச்சட் பதிரான பேராசிரியர் உள்ளடங்களாக மூவரைக்கொண்ட ஒரு குழுவினை அமைத்திருந்தார். இக்குழுவின் சார்பாக இவரே அறிக்கையினை எழுதினார். இதற்கு மற்றவர்கள் உடன்பாடாக இருந்தமையால், இப்பரிந்துரையின் பெயரில் இணைப்புக் கல்லூரிமுறை ஒழிக்கப்பட்டது. தென்னிலங்கையிலே ஆறு கல்லூரிகள் இணைந்து *இரஜரட்டை, சப்ரகமுக* எனும் இரு பல்கலைக்கழகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டன. அத்தோடு வவுனியாக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தோடும், திருகோணமலைக் கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்தோடும், அட்டாளச்சேனைக் கல்லூரி தென்கிழக்குப் பல்கலைக்கழத்தோடும் இணைக்கப்பட்டன. இந் நடவடிக்கை மாணவர்களது கோரிக்கையை நிறைவேற்றவும், ஊழியர்களின் தொழில் வாய்ப்பு பேணப்படவும் வழி வகுத்திருந்திருந்ததெனலாம்.

இக்காலத்தில் பல்கலைக்கழக அனுமதி பெறுகின்ற மாணவர்களுக்கு ஆங்கிலப் போதனை வகுப்புக்கள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்ததோடு தென் கிழக்குப்

பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட பிரச்சினையை தீர்த்து வைக்க வந்த பொழுது, அழைப்பின்றி கிழக்குப் பல்கலைக்கழகம் வந்து அங்குள்ள வசதிகளை ஆராய்ந்து அதன் முன்னேற்றத்திற்கு வேண்டிய தீர்க்கமான நடவடிக்கையொன்றை மேற்கொண்டதாக குறிப்பிடுகின்றார்.

2006ஆம் ஆண்டு தனது 66வது வயதில் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்ட பேராசிரியர், அதன் பின்பும் தான் கொண்ட ஆர்வத்தினாலும், தமிழ் மொழியில் பயிலும் மாணவர்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற ஆவலினாலும், தனது சேவையினைத் தொடர்ந்தும் மேற்கொண்டுவருகின்றமையைக் காணலாம்.

அந்த வகையில், 2007ஆம் ஆண்டில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதன் முதலாக வரலாற்றை ஒரு பாடமாகப் போதிக்க எமது பேராசிரியர் வருகை விரிவுரையாளராக அழைக்கப்பட்டிருந்தார். இவரது போதனைக் கவர்ச்சியினால் பெருந்தொகையான மாணவர்களும் ஆர்வமாக வரலாற்றைக் கற்க முனைந்தமையால், இவரின் ஆலோசனைப்படி வரலாறு தொடங்கப்பட்ட முதல் வகுப்பினரிலே சிறப்புக் கற்கையினைத் தொடரவும் அனுமதிக்கப்பட்டனர். அத்தோடு, மிகக் குறுகிய காலத்திலே இதுவொரு துறையாக வளர்ச்சியடையவும் இவரே காரண கர்த்தாவாக இருந்தார். அந்த வகையில் நானும் அம் முதல் வகுப்பு மாணவர்களுள் ஒருவர் என்பதில் பெருமையடைகிறேன்.

இலங்கைத் தமிழர்களது அரசியல் பண்பாடு வரலாற்றை வித்துவ பூர்வமாகவும், தெளிவாகவும் எழுதி வெளியிடவேண்டும் மற்றும் இலங்கைத் தமிழர்கள் மனித உரிமைகளின் அடிப்படையில் இயல்பாக தமக்குரிய இயற்கையான உரிமைகள் எல்லாவற்றையும் பெற்று வாழ்கின்ற நாடு காண வேண்டும் எனும் இலட்சியங்களைக் கொண்ட இவர் *ஈழத்தின் உண்மைகள்* எனும் நூலினை எழுத வேண்டுமெனும் நீண்டநாள் விருப்புடையவராகவுள்ளார்.

இவருடன் ஒரு முறை உரையாடும் போது தான் தனது பட்டமளிப்பு விழாவிற் கலந்து கொள்ளவில்லை யென்றார். அதற்கு அவர் கூறிய காரணம் *அங்கு சென்று ஏன் நேரத்தை வீணாக்குவான்* என்பதாகும். இதில் இருந்து அவர் தனது ஒவ்வொரு வினாடியையும் இயன்றளவு தனது ஆய்வுக்காக பயன்படுத்தியிருந்தமையே இத்தகு உயர்ச்சிக்கு காரணமாயிருந்த தென எம்மால் உணர முடிந்தது. இத்தகைய இவரது சிறப்பு மிக்க சேவையினைப் பாராட்டும் விதமாக *பத்மம்* எனும் நூலினை வெளியிட்டு கௌரவித்துள்ளமையைக் காணலாம். எனவே மதிப்புக்குரிய இலங்கையின் தலைசிறந்த பேராசிரியரைப் பற்றி ஆய்வு செய்வதில் மன மகிழ்வும், பெருமையுமடைகின்றேன்.

இலங்கை மற்றும் இலங்கைத் தமிழர், அவர்தம் சமுதாயம், சாசனங்கள், வணிக கணங்கள், சமயம், இந்து நாகரிகம், அரசியல், கலை, மற்றும் தென்னிந்திய

வரலாறு தொடர்பாகவும் பேராசிரியர் தனது ஆய்வினை மேற் கொண்டுள்ளார். இவரது இத்தகைய ஆய்வுப்பணிகள் தொடர்பாகவும், அதன் விளைவாக ஏற்பட்ட முன்னேற்றங்கள் பற்றியும், ஆய்வு வளர்ச்சிகள் பற்றியும், வரலாற்றுத் துறையிலும், சமுதாயத்திலும் ஏற்பட்டுக் கொண்ட மாற்றங்கள் பற்றியும் இக் கட்டுரையின் ஊடாக ஆராயப்பட்டுள்ளது.

எமது விரிவுரையாளர் எஸ். சிவகணேசன் அவர்களின் ஆலோசனையின் பெயரில் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களின் ஒத்துழைப்பும், வழிகாட்டலுடனும் என்னால் இந்த ஆய்வினை முன்னெடுக்க முடிந்தது. கட்டுரையாசிரியர் உதயசாந்தினி அவர்களின் அறிவுரையும், வழிநடத்தலும் நினைவு கூறத்தக்கதாகும். இவற்றோடு எனக்கு இயல்பாக ஏற்பட்டுக் கொண்ட ஆர்வமும் இவ்வாய்வினைச் சிறப்பாக முன்னெடுக்க ஏதுவாக அமைந்திருந்தது.

இவ் ஆய்வுக் கட்டுரையானது எட்டு அத்தியாயங்களைக் கொண்டது. முதலாவது அத்தியாயம் எமது பேராசிரியர் தொடர்பான பல விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இதில் வெளியாகியுள்ள தகவல்கள் பெரும்பாலும் பேராசிரியரின் நேரடி நேர்காணலின் விளைவாகப் பெறப்பட்டவையும், வேறெங்கும் வெளியிடப்படாததுமான அரிய பல தகவல்களாகும். இதில் பேராசிரியரின் பிறப்பு, இளமைக்காலம், கல்வி, இதுவரையில் இவர் வகித்த பதவிகள், பெற்றுக் கொண்ட விருதுகள், பட்டங்கள் மற்றும் அவர் பங்கு பற்றிய மாநாடுகள் என்பன தொடர்பான முழுமையான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது அத்தியாயம் பேராசிரியரது ஆய்வுமுயற்சிகள் தொடர்பானதாகும். இதில் பேராசிரியர் ஆரம்பகாலம் முதல் இன்று வரை மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பாகவும், அவர் எதிர் கொண்ட பிரச்சினைகள், தடைகள், அவற்றை தாண்டிப்பெற்ற வெற்றிகள் தொடர்பாகவும் சுருக்கமாக அறிமுகப்படுத்தியுள்ளேன். இவை பேராசிரியருடனான நேர்காணலின் மூலம் பெறப்பட்ட தகவல்களாகும்.

அதனைத் தொடர்ந்து வரும் அத்தியாயமானது பேராசிரியரது வரலாறு தொடர்பான ஆய்வுகளைப் பற்றியதாகும். அதிற் குறிப்பாக இலங்கை வரலாறு தொடர்பாகவும், இலங்கைத் தமிழர் வரலாறு தொடர்பாகவும் மற்றும் இந்திய வரலாறு தொடர்பாகவும் பேராசிரியர் மேற்கொண்ட ஆய்வுகளும், அவை தொடர்பான கட்டுரைகளினதும், நூல்களினதும் சிறப்புக்களும் இதில் ஆராயப்பட்டுள்ளன.

நான்காவது அத்தியாயமானது சாசனவியலுக்கு பேராசிரியர் ஆற்றிய பணிகள் தொடர்பானவையாகும். இதில் இவரால் புதிதாகப்படிக்கப்பட்ட சாசனங்கள், திருத்தி வாசிக்கப்பட்டு விளக்கம் கொடுக்கப்பட்ட சாசனங்கள், சாசனவியல் தொடர்பாக இவர் மேற்கொண்டுவரும் ஆய்வு முயற்சிகள் பேன்றன தொடர்பாகவும்

ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக இவர் வெளியிட்ட சாசனவியல் தொடர்பான நூல், மற்றும் கட்டுரைகள் தொடர்பாகவும் பிற்கால சாசனவியல் ஆய்விற்கு இவராற்றிய சேவைகள் தொடர்பாகவும் இப் பகுதி விளக்குவதாயுள்ளது.

வரலாறு, தொல் பொருளியல் மட்டுமன்றி இந்துப்பண்பாடு, நாகரிகம் தொடர்பாகவும் பரந்துபட்ட ஆய்வினை இவர் மேற்கொண்டுள்ளார். அந்தவகையில் இந்துப்பண்பாட்டுக்கு ஆற்றிய பணிகளை ஐந்தாவது அத்தியாயத்தினூடாக ஆய்வுசெய்துள்ளேன். இதில் இந்துப்பண்பாடு, நாகரிகம் தொடர்பாக பேராசிரியர் மேற்கொண்ட ஆய்வுகளும், அவர் வெளியிட்ட ஆய்வு நூல்கள், கட்டுரைகள் தொடர்பாகவும், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் பேராசிரியரின் தொடர்பும், அதன் மூலமாக பேராசிரியர் மேற்கொண்ட பணிகள் தொடர்பாகவும் விளக்கமாக ஆராயப்பட்டுள்ளது.

இந்து சமயத்தோடு இவருக்கு ஏற்பட்ட ஈடுபாடு காரணமாக அதனோடு தொடர்புடைய கலைகள் மீதும் தனது ஆராய்ச்சியைத் தொடர்ந்துள்ளார். அந்தவகையில் இவரின் கலைகள் தொடர்பான ஆய்வு நூல்கள், கட்டுரைகள் தொடர்பாக ஆறாவது அத்தியாயத்தில் ஆராய்ந்துள்ளேன். இதில் இவரின் இலங்கை, இந்தியக் கலைகள் தொடர்பான கட்டுரைகள் பல ஆராயப்பட்டுள்ளன.

இவரின் ஆய்வுப் பயணமானது குறிப்பிட்ட ஒரு துறையை நோக்கியதல்ல. பல்துறை சார்ந்த ஆய்வினை மேற்கொண்டு எதிர்காலத்தவர் தேடும் இக்கால வரலாற்றுக்காய் சமர்ப்பித்துள்ளார். எனவே இவரின் மேற்குறிப்பிட்டவை தவிர்ந்த ஏனைய ஆய்வுப் பணிகள் தொடர்பான ஒரு கண்ணோட்டமாக ஏழாவது அத்தியாயம் அமைந்துள்ளது. குறிப்பாக இதில் பௌத்த சமயம், கிறிஸ்தவ சமயம், மற்றும் கல்வியியல்சார் ஆய்வுக் கட்டுரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இறுதி அத்தியாயத்தில் இவ்வாய்வின் தொகுப்புரையும், அவர் தொடர்பான சில விமர்சனங்களும் இடம்பெற்றுள்ளன. எனவே இவ்வாய்வினை வரலாறு பேசும் வரலாற்றாளரது வரலாற்றினையும், வரலாற்றுப் பணியினையும் வரலாற்றில் பேசப்படுவதற்காய் எனது வரலாற்றாய்வாகச் சமர்ப்பிக்கின்றேன்.

- ஆய்வாளர் -

# பொருளடக்கம்


| விடயம் | பக்கம் |
|---|---|
| முன்னுரை | i |
| நன்றியுரை | v |
| **அத்தியாயம் - 1** | |
| 1.0.வாழ்வும் வளமும் | 1 |
| 1.1: பிறப்பு | |
| 1.2: கல்வி | 1 |
| 1.2.1:ஆரம்பக்கல்வி | |
| 1.2.2: உயர்கல்வி | 3 |
| 1.3: பதவி | 5 |
| 1.3.1: பல்கலைக்கழக கல்வி சார் பதவிகள் | |
| அ) போதனாசிரியர் எனும் வகையில் இவர் வகித்த பதவிகள் | 5 |
| ஆ) உயர் பதவி நிலைகளும் அங்கத்துவங்களும். | 6 |
| 1.3.2: பல்கலைக்கழக கல்வி சாராத பதவிகள் | 7 |
| 1.4: கற்பித்தல் முறை | 8 |
| 1.5: விருதுகளும் பட்டங்களும் | 10 |
| 1.6: பங்குபற்றிய சர்வதேச மாநாடுகள். | 11 |
| 1.6.1: தேசிய ரீதியாக நிகழ்ந்தவை | |
| 1.6.2: சர்வ தேச ரீதியாக நிகழ்ந்தவை | 12 |
| **அத்தியாயம் - 2** | |
| 2.0. ஆய்வு முயற்சிகள் - ஓர் அறிமுகம் | 14 |
| **அத்தியாயம் - 3** | |
| 3.0. வரலாறு தொடர்பான ஆய்வுகள் | 19 |
| 3.1: இலங்கைத் தமிழர் வரலாறு | |
| 3.1.1: கட்டுரைகள் | 20 |
| 3.1.2: நூல்கள் | 22 |
| 3.2: இலங்கை வரலாறு | 23 |
| 3.2.1: கட்டுரைகள் | |
| 3.2.2: நூல்கள் | 24 |
| 3.3: இந்திய வரலாறு | 24 |

3.3.1: கட்டுரைகள்

அத்தியாயம் - 4
4.0. சாசனவியல் தொடர்பான ஆய்வுகள் 32
4.1: ஆய்வு முயற்சிகள்
4.2: ஆக்கங்கள் 42
4.2.1: நூல்
4.2.2: கட்டுரைகள்

அத்தியாயம் - 5
5.0. இந்துப் பண்பாட்டுக்கு ஆற்றிய பணிகள் 49
5.1. ஆய்வு முயற்சிகள்
5.1.1. கட்டுரைகள் 52
5.1.2. நூல்கள் 53
அ) எழுதியவை
ஆ) பதிப்பித்தவை 54
இ) இணைப்பதிப்புக்கள் 55
5.1.3. இந்துக் கலைக் களஞ்சியத்தில் வெளிவந்த கட்டுரைகள் 55
5.2. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும், பேராசிரியரும். 59

அத்தியாயம் - 6
6.0. கலைகள் தொடர்பான பணிகள் 64
6.1: ஆய்வுமுயற்சிகள்
6.1.1: பதிப்பித்த நூல்கள்
6.1.2: கட்டுரைகள் 65

அத்தியாயம் - 7
7.0. பேராசிரியரது ஏனைய ஆய்வு முயற்சிகள் 74
7.1: பௌத்தமதம் தொடர்பான ஆய்வுகள் 77
7.2: ஏனையவை. 77
7.2.1: கிறிஸ்தவ சமயம் தொடர்பான ஆய்வுகள்
7.2.2: கல்வி தொடர்பான ஆய்வுகள் 78
7.2.3: பிற ஆய்வு